[28th January 1972

தோல் அங்காடிகள்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1971, ஆகஸ்டு கடைசி வாரத்தில் இம் மாநிலத்தில் தோல் அங்காடிகள் முடங்கிக் கிடந்தன என்பதை அரசு அறியுமா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

Iron Ore

* 41 Q.—Thiru V. ISVARMURTI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether any Japanese Team has been requested to undertake any experiment into the iron ore findings in Tiruvannamalai in North Arcot District;

(b) whether it has submitted its report; and

(c) if so, the details thereof?

இரும்புக் கனிகள்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வட ஆர்க்காடு மாவட்டம், திருவண்ணாமலையில் இரும்புக் கனிகள் கிடைப்பது பற்றிச் சோதனைகள் நடத்தும்படி ஜப்பானியக் குழு எதற்கேனும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதா?

(இ) அது தன்னுடைய அறிக்கையை பணிந்தனுப்பியுள்ளதா?

(உ) ஆமெனில், அதுபற்றிய விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) இல்லை.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

Tamil Nadu Industrial Development Corporation

* 42 Q.—Thiru V. ISVARMURTI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Union Government have issued letters of intent to the Tamil Nadu Industrial Development Corporation for the manufacture of Tyres and Tubes; and

(b) if so, the details thereof?

தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகம்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) டயர்கள், டியூப்கள் தயாரிப்பதற்காக தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்திற்கு மத்திய அரசு, அனுமதிக் கடிதம் வழங்கியுள்ளதா?